954

# சந்தேகம்.

ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வான நணிய துடைத்து.—குறள்.

ச. தா. மூர்த்தி முதலியார்

பல நன்னூலாசிரியர்.

இரங்கோன் & சென்னை
நவீனகதா புத்தகசாலையாரால்

சென்னை சூளை,
"ஆட்ஸிட்" அச்சுக்கூடத்தில்
...க்கப்பெற்றது.

...918

இ,... [அணா 2.

R34
N18.
178540

உ

# சந்தேகம்.

சந்தேகம் என்றால் புத்தி நிலையாமை என்று பொருள் படும். ஐயப்பாடென்பதும் அவநம்பிக்கையென்பதும் இதனையே குறிக்கா நிற்கின்றன. இச்சந்தேகம் மனதைப்பற்றியதல்லவென்றும், ஆனால் மூளையின் சம்பந்தமுடையதென்றும் மேதாவிகள் அறிந்து வெளியிட்டுள்ளார்கள். ஸ்திரமில்லாத புத்திக்குச் சந்தேகமென்று சொல்லப்படும் என்று மேலே கூறியதை இந்த ஆராய்ச்சி வலியுறுத்தா நிற்கிறது. இச் சந்தேகம் பலவாற்றால் உண்டாகிறது. முக்கியமாக அச்சத்தாலும், விபரீத எண்ணத்தினாலும், ஆராயுந்தன்மை யின்மையாலும், மூடவிஸ்வாசத்தினாலும், அனுமானத்தினாலும் நிகழ்கின்றது.

சந்தேகம் மஹா கொடியது. ஏனெனில்? சந்தேகங் கொண்டவனுக்கு மன அமைதி யென்பதே இல்லாததாகும். அவனுக்கு அவன் தொடங்கும் எல்லாக்காரியங்களிலும் சந்தேகமேற்பட்டு அவன் ஜயமடைவதைத் தடைப்படுத்தி நிற்கும். அவன் மனதில் நல்லெண்ணங்கள் உதிப்பதற்கே வழியுண்டாகாது. சந்தேகிக்கு தன் சுயமுயற்சியிலேயும் சந்தேக மேற்படுமாகையினால் எல்லா விதத்திலும் அவன் சங்கடப்படுபவனாவான். நான்கும் நான்கும் எட்டென்பதை திட்டமாக அறிந்திருந்தும் சந்தேகிக்கு அவ்வுண்மையில் சந்தேகமே. அது எப்படியாகும் என்று பலவிதங்களில் ஒவ்

வொரு எண்ணுகவும், இரண்டிரண்டாகவும் கூட்டிப்பார்த்து அதன் பிறகே நான்கும் நான்கும் எட்டாகுமென்றறிவான். இதனுல் ஆகும் காலவியர்த்தத்தை அவனறியமாட்டான். இன்னகாரியத்தை இன்னவிதமாகச் செய்தால் என்னவிபரீதம் ஏற்படுமோ என்று எடுத்தகாரியங்களிலெல்லாம் அவனுக்கு விபரீத எண்ணம் உண்டாகும். இந்த விபரீத உணர்ச்சியையே நம்பி சதா உருப்போட்டு வருவதனுல் ஏதாவது ஒருகாரியம் என்றேனும் அவன் சந்தேகித்த வண்ணமே நேரிட்டு விடுமேயானுல் தன்னை ஓர் முன்னுணர்வோனுக—தீர்க்கதரிசியாக—நினைத்துத் தன்னுடைய சந்தேகத்தை மேலும் வளர்க்கிறதுண்டு.

சந்தேகிக்கு, கடவுள் விஷயத்திலும் நம்பிக்கை இருக்கிறதில்லை. ஏனென்ருல்? அவனுக்கு ஆராய்ச்சித்தன்மை இன்மையினுலேயே. கடவுளைப்பற்றியும் அவருடைய திருவிளையாடல்களைப்பற்றியும் பலவிதமான விபரீத சந்தேகங்கள் அவனுடைய எண்ணத்தில் தோற்றமாகி, அவ்விதமாகிய எண்ணங்காரணமாக எழும் குதர்க்கவாதங்கள் செய்து முடிவில் தான்கொண்ட கொள்கையே சரியானதென்று ஸ்தாபிதப்படுத்தி கடவுளுடைய உண்மை நிலையை அறியாது அலமந்து போய்விட நேரிடும். அதிகம் சொல்லுவான் என்? சந்தேகிக்கு எதன்மேலும் நம்பிக்கைகிடையாது.

இக்காரணத்தினுல், சந்தேகம் நம்பிக்கைக்குநேர்விரோதமானதென்று சொல்லலாம். நம்பிக்கையானது அதைக்கைக்கொண்டவனுக்கு எவ்வளவு நலஞ்செய்துவைக்குமோ அவ்வளவு துன்மையை சந்தேகம் அதைக் கொண்டுள்ளவனுக்குத் தேடியமைக்கும் என்பதில் யாதும் சந்தேகமின்று.

128540

சந்தேகமானது எப்படி முதல் முதலில் ஒருவனிடம் குடிகொள்ளுகிறது என்று ஆராய்ச்சிசெய்து பார்த்தால், அது நம்பிக்கை கொள்ளாமையினாலேயே என்பது புலப்படாமற் போகாது. ஒரு குடும்பத்தில் பிதாவுக்கு தன்னுடைய குமாரன்மேல் சந்தேகம், குமாரனுக்கு தன் பிதாவின்மேல் சந்தேகம், மாதாவுக்கு பருவமடைந்துள்ள தன்னுடைய குமாரத்தியின்மேல் அவநம்பிக்கை, புருஷனுக்குத் தன்னுடைய மனையாட்டியின்மேல் சந்தேகம், மனைவிக்குத் தன்னுடைய புருஷன்மேல் அவநம்பிக்கை; இவ்விதமாக இருந்தால் அக்குடும்பத்தின் க்ஷேமம் தடைப்படாமல் செழித்தோங்குமா கூறுங்கள்!

ஒரு தொழிற்சாலையில் எஜமானனுக்கு அவனுடைய பிரதம காரியஸ்தரின்மேல் சந்தேகம், பிரதம காரியஸ்தருக்குத் தன்கீழ் உத்தியோகஸ்தன்மேல் சந்தேகம், அவனுக்கோ அவனுக்குக்கீழ் உத்தியோகஸ்தன்மேல் அவநம்பிக்கை, அந்தக்கீழ் உத்தியோகஸ்தனுக்கு பணியாளர்கள்மேல் சந்தேகம்; அந்தத்தொழிற்சாலை எங்ஙனம் ஒழுங்குபெற நடைபெறும்?

ஒருநாட்டைப்புரக்கும் மன்னனுக்கு தன்னுடைய மந்திரியின்மேல் அவநம்பிக்கை. மந்திரி தந்திரியை அவநம்பிக்கையோடு பார்க்கிறான். தந்திரி சேனைத்தலைவனைச் சந்தேகக்கண்கொண்டு நோக்குகிறான். சேனைத்தலைவனோ தன் பட்டாளங்களில் உள்ள யுத்தவீரர்களை விபரீத எண்ணத்தோடு பாவிக்கிறான். அரசனுக்கு குடிகளின்மீது சந்தேகம், குடிகளுக்கு அரசன்மீது சந்தேகம் இவ்வித சந்தேகத்தில் அந்த நாட்டின் நடபடிக்கை நாடகத்தைப் போன்றதாகவல்லவோ இருந்துவரும்.

ஒரு மடாலயத்திலுள்ள குருநாதர் தம்முடைய உப குருக்களை சந்தேகக்கண்கொண்டு பார்க்கிறார், உபகுருக்கள், குருநாதரை விபரீதமாக நினைத்து நோக்குகிறார்கள். சிஷ்ய பாம்பரையோ தங்களுடைய குருக்கள்மார்களை நம்பிக்கை யற்ற தன்மையில் நோக்கி நிற்கிறார்கள் குருக்கள்மார்களும் தங்களுடைய சிஷ்யர்களிடத்தில் அவ்வண்ணமே நடந்து கொள்ளுகிறார்கள். இவ்வித ஒழுங்கினத்தில் அம்மடாலயம் செவ்வனே நடைபெறுவது எங்ஙனம்?

மேற்கூறியவைகளுக் கெல்லாம் காரணம் சந்தேகம். சந்தேகம் என்பது சதிமோசமானது; உலகத்தையே நாசப் படுத்திவிடக்கூடிய தன்மையினதாகும். ஒருவனுடைய முன்னேற்றத்தைத் தடைப்படுத்தி விடுவதல்லாமல் அவனைப் படுகுழியிலும் கொண்டுபோய் வீழ்த்திவிடும். உலகத்தி லுள்ள எல்லோரையும் ஒரேதன்மையில் நிஷ்களங்கமான மனங்கொண்டு பரிசுத்தமான பார்வையுடன் பார்க்கவேண் டும். இதனால் இலாபமுண்டேயொழிய உலோபமன்று. உலகத்தில் சந்தேகங்கொண்ட மனத்துடன் உலாவித்திரித லைப்பார்க்கிலும் தற்கொலை புரிந்துகொள்ளுவது மேலான காரியமாம்.

சந்தேகமே இருக்கக்கூடாதென்று சொல்லவருகையில் கல்வியைப்பற்றிய விஷயமும் ஞாபகத்தில் வந்துவிட்டது. கல்வி விஷயத்தில் ஒருவனுக்கு எவ்விதமாகிய சந்தேகமும் ஏற்படக்கூடாது. அதில் சந்தேகம் உண்டானபோதிலும் அதை ஒழித்துக்கொள்ளவேண்டிய முயற்சிதேடவேண்டும். கல்வி எப்பொழுதுமே சங்கையற்றதாக இருக்கவேண்டும். சங்கையறக் கற்காத கல்வி ஒருவனை நடு ஆற்றில்கொண்டு

போய்த் தள்ளிவிடும். சங்கையறக்கற்க முடியாவிட்டால் கற்காமலிருப்பதே மேலானதாகும். சங்கையோடு கூடிய கல்வி அதைக்கற்போனுக்கு யாதொரு விதமான உதவியையும் நல்காது போவதுடன் அதனால் பிறருக்கும் பிரயோசனம் இல்லாதுபோம்.

இவ்விதமாகவே மதசம்பிரதாயமான விஷயங்களையும், சங்கையற—சந்தேகம் நீங்கக் - கற்கவேண்டும். இன்றேல் அதனால் யாதொரு நன்மையையும் எதிர்பார்க்கமுடியாது போம். எத்தனை பெயர்கள் தாம்பிறந்த மதத்திலுள்ள விஷயங்களைச் சங்கையறக்கற்காத தோஷத்தினால் அதில் தங்களை உயர்வு படுத்தக்கூடிய போதனைகள் ஏதும் இல்லையென்பதாகிய தப்பு அபிப்பிராயங்கொண்டு, பிறமதத்துட் பிரவேசிக்கிறார்கள். புகுந்த அம்மதத்திலேயாகிலும் அவர்களுக்கு நம்பிக்கை உண்டோவென்றால். பலருக்குக்கிடையாதென்றே தீரமாகச் சொல்லலாகும். தன் மதத்திலுள்ள விஷயங்களை சங்கையறக் கற்றுத்தெளியாதவன் வேறு எந்த மதத்திலும் உள்ள விஷயத்தை அறிந்துகொள்ளும் ஆற்றலுள்ளவனாக இருப்பானென்று எண்ணுவதற்கிடமில்லை? இன்னொரு விஷயத்தையும் இங்கு கவனித்தல் ஆவசியமாம். தம்முடைய மதத்தின் சாராம்ஸத்தை அறியாதபலர், முன்னோர் உரைகளுக்குக் குற்றம் சமர்ப்பிக்கக் கங்கணங் கட்டிக்கொள்ளுகிறதுண்டு. —"இவ்விதமாக இன்ன புராணத்தில் கூறியிருப்பன அவ்வளவும் கட்டுக்கதைகள். இவ்விதமாக நடந்திருக்குமென்று எண்ணுவதற்கிடமில்லை. நாகரீகம் மட்டுப்பட்டிருந்த காலத்தில் அவைகள் நம்பக்கூடியனவாக இருந்திருக்கலாம் இப்பொழுது நாகரீகம் தலையெடுத்து ஆடிக்

கொண்டிருக்கும் காலத்தில் ஜனங்கள் அவ்விதமான கட்டுக் கதைகளையும் பொய் புனைந்துரைகளையும் நம்புவார்களென்று எதிர்பார்ப்பது கூடாமையான காரியமாகும்" என்னும் போலி அபிப்பிராயங்களை எடுத்து வெளியிடுவதுண்டு. இந்தக் கேட்டுக்குக் காரணம் சங்கையறக் கற்காமையேயாகும். சங்கையறக் கற்றால் தனக்கேற்படும் சந்தேகம் நிவர்த்திக்கப் படுவது மல்லாமல் பிறருக்குச் சந்தேகம் தோன்றிய போதிலும் அதைப் போக்கிவைக்க இயலும். அப்படியல்லாமல் தானும் கெட்டு பிறரையுங் கெடுத்துவைத்தல் எவ்வளவு கேடான சம்பவமாகும். கவனியுங்கள். சங்கையறக் கற்காவிட்டால் இன்னொரு அசம்பாவிதமும் நேரிடுவதாகும். அதாவது ஒவ்வொருவரும் விரும்பியடையக்கூடிய உயர்ந்த பதவியும், அவ்வழிகளைத் தேடியடைவதற்கு ஏற்பட்டுள்ள வழிகளையும், அவ்வழிகளைத் தேடியடைவதற்கு ஞானக்கண்ணும் ஆகிய இவையாவும் கிட்டாதனவாகும். சந்தேகங் கொண்டுள்ளவன் அஞ்ஞானப் பொட்டகமாவான். ஞானமென்னும் சூரியன் அங்கு உதயமாகாதவரையில் அஞ்ஞானமென்று சொல்லும்படியான இருள் நீக்கப் படமுடியாமலிருக்கும். ஞானசூரியன் உதயமாவதற்கு சங்கையற்ற கல்வி வேண்டும்.

ஆகையினால் எந்தவிதமாக ஆராய்ந்து பார்த்தாலும் சந்தேகம் அதைக் கொண்டவனுக்குச் சங்கடத்தையே உண்டு பண்ணுவதாக இருக்கக்காணலாம். ஆகையினால் இத்தீய சந்தேகம் எந்தவகையாலும் வந்து புகாமலும், ஏற்கவே அதிவாசஞ் செய்வதற்கு இடங்கொடுத்திருப்பின் அதை உடனே ஓட்டி யொழித்தும் விடவேண்டும். இவ்விதஞ் செய்வதினால் நன்மைகள் பல சித்திக்கும் என்பது மூக்காலு மெய்ம்மையாம்.

இனி, இச்சந்தேகம் எத்தனைவகைத்து? அது எப்படி ஒருவனை வந்து பீடிக்கிறது? அதனால் உண்டாகும் கேடுகள் எவ்வகைத்து? அதை ஒழிப்பது எப்படி? என்னும் படியான விஷயங்களைப்பற்றி ஆராய்வாம்.

இதனுடைய துவக்கத்திலே காட்டியாங்கு சந்தேகம் பொதுவாக ஐந்து வகையினதாகும். அவையாவன:—

(1) அச்சத்தால் உண்டாகும் சந்தேகம் (2) விபரீத எண்ணத்தினால் உண்டாகும் சந்தேகம் (3) ஆராயுந் தன்மையின்மையாலுண்டாகும் சந்தேகம் (4) மூடவிஸ்வாஸத்தினால் உண்டாகும் சந்தேகம் (5) அனுமானத்தினால் உண்டாகும் சந்தேகம் என்பனவே.

இவற்றுள் அச்சத்தினாலேற்படும் சந்தேகம் எப்படியுண்டாகிறதென்று விசாரிப்பாம். அச்சம் என்றால் பயம். ஒருவன் தான் செய்ய விருக்கும் ஒரு காரியமோ, அல்லது தான் செல்லும்படியான பாதையோ சரியானதென அறிந்திருந்தும் அக்காரியத்தைப் புரிந்தால் என்னாகுமோ, அல்லது அவ்வழியாகச் சென்றால் என்ன கெடுதி நேரிடுமோ என்று பயப்படுவதினால் அவன் செய்ய விருந்த நற்காரியமும், அவன் செல்ல விருந்த அந்த நேர்வழியும் பங்கப்பட்டுப் போய்விட நேரிடும் அவைகளின் பயனாக அவன் அடைய விருந்த நன்மையும் ஒழிந்து போனதாகும். இவ்விதமாகிய—பயங்காரணமாக - ஒருவன் தான் சரியென அறிந்துகொண்ட விஷயத்தில் சந்தேகங் கொள்ளுவது சரியன்று. எல்லோருக்கும் கலங்காத சிந்தை இருக்கவேண்டும். அவ்விதமாகிய — உறுதியான — மனநிலை கொண்டோனே முன்னேற்றமடைவான். ஆனால் இந்த மனோதிடம் நன்மையான விஷயத்தில் மாத்திரம் இருக்கவேண்டுமே

யொழிய தீமையான விஷயங்களிலன்று. நல்ல விஷயங்களில் ஒருவன் என்றுமே பின்னடையப்படாது. உலகத்தில் பயப் படக்கூடிய விஷயம் ஒன்றுதான். அது பாவமேயாகும். பாவ காரியம் புரிய மனம் தூண்டுதல் செய்யுமேயானால் உடனே அவ்வெண்ணத்திற்குப் பயந்து அதை யழித்துப் போட பிர யாசைப்படவேண்டும். புண்ணியம் செய்வதில் ஒருவன் எவ் விதமாகிய அச்சமுங் கொள்ளவேண்டியதில்லை. இன்னுமொரு முறை அதைப்பற்றி யோசிக்காமலே, மனதில் அதைச்செய்ய எண்ணந் தோன்றிய அந்தட்சணமே அதைச் செய்து முடிக்க வேண்டும். நல்ல காரியஞ் செய்வதில் பயந்த தன்மையை யும் அது கொண்டு பயக்கும் சந்தேகத்தையும் கைக்கொள் ளப்படாது.

இனி, விபரீத எண்ணத்தினால் எப்படி சந்தேகம் உண் டாகிறதென்றால்? ஒருவர் சொல்லும்படியான உரையிலோ அல்லது தானாகவே படித்தறியும் விஷயங்களிலேயோ, அல் லது தன்னுடைய மனதில் உதிக்கும்படியான எண்ணங்களி லேயோ நம்பிக்கை கொள்ளாமல், உள்ளதொன்றாயிருக்க அது அப்படி யில்லாமல் இப்படி யிருக்கப்படாதோ, என்பதாக எண்ணி யாதொரு முடிவுக்கும் வராமல் போகிறதுண்டு. இத னால் ஒருவன் தான் எடுத்துக்கொள்ளும் எல்லா விஷயங்களி லும் தன்னுடைய விபரீத எண்ணத்தைக் கொண்டுசெலுத்தி யாதொரு முடிவுக்கும் வராமற்போக நேரிடும். விபரீதம் என்ற மாத்திரத்திற்றானே அது சரியான வழியினதன்று என்றேற்படுகிறது. சரிவழி போகாதவன் தொடர்வழி செல் பவனாகிறான். சரிவழி சரியான விடத்துக்கு அழைத்துச் செல்லும், தொடர்வழியோ போகவேண்டிய நோக்கங்கொண்டு

செல்லும் இடத்தைத் தவிர்த்து வேறிடங்களுக்கே கொண்டு போகும். அதினால் தான் கோரிச்சென்ற இடத்தை அடைய முடியாமற் போதல் ஒன்றுவதுடன் பல துன்பங்களுக்கு ஆட்படவேண்டியதாகவும் நேரிடும். ஒருவன் தான் கைக்கொள்ளும் எந்தக் காரியத்திலும் முடிந்த அபிப்பிராயமும் கொள்கையும் கொண்டிறவேண்டும். அப்பொழுதுதான் அவன் கைக்கொண்ட காரியம் ஜயசித்தி யடையும். இன்றேல் எடுத்துக் கொண்ட காரியம் பங்கப்பட்டுப் போவதுமல்லாமல் மன ஆயாசமும் பிற கேடுகளும் சம்பவிக்கும். ஒருவன், விபரீத எண்ணந் தோன்றுவதற்கு எவ்வாற்றானும் மனதில் இடங் கொடுக்கப்படாது. இந்த அசம்பாவிதத்திற்கு இடங் கொடுத்தால் அது தன்னுள் இருந்துகொண்டே தனக்கு என்றுங் கேடுபுரிந்து நிற்கும். இந்த விபரீத எண்ணம் பொதுவாக எத்தகையோர்க்குத் தோன்றுமென்றால்? சபலசித்தமுடையோர்க்கே மேலே அச்சத்தால் உண்டாகும் சந்தேகத்தைப்பற்றி விளக்க வந்தபொழுது காட்டியதுபோல் ஒவ்வொருவரும் கலங்காத சித்தத்தைப் பெற்றுறவேண்டியது. புருடராகப் பிறந்தோர்க்கு பெருந்தனமாக அமைந்துள்ளது கலங்காத சிந்தையே. இவ்விதமாகிய சித்தம் உள்ளவர்கள் ஏன்றுமே தாங்கள் தொடங்கும் எல்லாக் காரியங்களிலும் ஜயம் பெறுவார்கள் என்பதில் யாதும் ஆட்சேபமின்று. உலகத்தில் மானுடரைச் சோதிப்பதற்கெழுந்துள்ள பல சோதனைகளில் இந்த விபரீத எண்ணமும் ஒன்றாகும். இந்த எண்ணம் மனதில் எழவிடாமற் பாதுகாத்து நிற்கவேண்டும்.

இனி, ஆராயுந் தன்மையின்மையால் நிகழும்படியான சந்தேகத்தை யெடுத்துக்கொள்ளுவாம். ஆராயுந் தன்மை பெற்றில்லாதோன் மானுடனாகப் பிறந்தும் அப்பெயர்பெற்றானாக

மாட்டான். ஏனெனில்? ஏனைய ஜீவவருக்கங்களைப் பார்க்கி லும் விசேஷித்த அறிவாகிய பகுத்தறியுந் தன்மையை மானுட வகையினரே கருவூலமாகப் பெற்றுள்ளார்கள். இந்தப் பகுத் தறியுந் தன்மைக்கே ஆராய்ச்சியென்றுஞ் சொல்லுகிறதுண்டு. இதைப் பெறுமல் தேக அமைப்புகளெல்லாம் பெற்றிருந்த போதிலும் யாதொரு பிரயோசனமுமின்று. "தக்கவின்ன தகாதனவின்னவென்று ஒக்கவுன்னலராயின் உயர்ந்துள மக்க ளும் விலங்கே" என்முர் கல்வியிற் பெரிய கம்பரும். இது ஒப்ப முடிந்த உண்மையே. ஆராய்ச்சித் தன்மையாகிய பகு த்தறியுங் குணமில்லாதவனுக்கும் கேவலம் மிருகங்களுக்கும் யாதும் வித்தியாசமின்று. மிருகங்களிலும் சில, நாயைப் போன்றவைகள், இந்தத் தன்மை பெற்றிருக்க, மானுடனுகப் பிறந்துற்றேன் அது பெறுது நிற்பது விசனிக்கக்கூடிய விஷ யமாம். இந்த உயர்ந்த தன்மையைப் பெறுது போனல் எடு த்த விஷயங்களிளெல்லாம் சந்தேகம் தோன்றுநிற்கும். இன்ன பெரியவர் இவ்வண்ணஞ் சொன்னரே அது உண்மையாகத் தான் இருக்குமோ, அல்லது பொய்மையாகவே யிருக்குமோ என்கிற அவநம்பிக்கையாகிய சந்தேகம் மனதுட் குடிபுகுந்து விடும். இதனுல் அத்தகையோன் தானுக அறிந்துகொள்ளும் தன்மையுமில்லாதவனுகி, பிறர் உரையிலும் நம்பிக்கை யிழந்த வனுக நின்று, மானுடனுகப்பிறந்தும் முன்னேற்றமடைய வழி யறியானுகி, இகத்திற் றுன்புற்று நிற்பதல்லாமல் பரத்திலும் நல்ல பயன் பெறுதவனுகப் போவான். பகுத்தறியுங் குண மும் ஆராய்ச்சித் தன்மையும் எப்படி வந்தமையும் என்றல்? அறிவை விசாலப்படுத்திக்கொள்ளுவதினுலேயே யென்பாம். அறிவு விசாலமடைந்திருந்தால் மாத்திரமே முடிந்த அபிப்பி ராயமும், செய்யத்தக்கன இவை, செய்யத்தகாதன இவை என்னும்படியான பேதாபேதமும் இதமகிதமும் தோன்றுறும்.

அறிவை விசாலப்படுத்திக்கொள்ளாதபொழுது மேற்காட்டிய பாகுபாட்டை யறிய முடியாமற் போவதுடன் பிறருடைய நல்லுரையிலும் சந்தேகம் கொள்ள நேரிடும். அறிவு, அதை விசாலப்படுத்தாத பொழுது அதாவது அபிவிருத்தி செய்யாத பொழுது எப்படி யிருக்குமென்றால் சுத்தம் செய்யாத மாணிக்கக் கல்லுக்குச் சமானமாக இருக்குமென்னலாம். மாணிக்கக் கல்லுக்குப் பிரகாஸமும் விலை மதிப்பும் அதைச் சாணைக் கல்லிலிட்டுச் சுத்தம் செய்யப்பட்ட பிறகு அதற்கு உண்டாகிறதே யொழிய சுத்தஞ் செய்வதற்கு முன்பன்று. சுத்தம் செய்வதற்கு முன் அதற்கும் ரஸ்தாவில் காணக்கிடைக்கும் கேவலம் கூழாங்கல்லுக்கும் வித்தியாஸமில்லாமல் இருக்கும். இதுபோலவே மானுடனாகப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் அறிவு அமைக்கப்பட் டிருந்தபோதிலும் அதை விருத்தி செய்துகொள்ளாது போனாலும் அல்லது அபிவிருத்தி செய்து கொள்ளாதபோதும் தன்னுடைய அறிவுத்தன்மையில் யாதொரு உயர்வும் இல்லாமலே இருக்கும். இந்த உயர்வைத் தேடுவதற்காக வேண்டி அறிவாகிய கூழாங்கல்லைச் சுத்தஞ் செய்யவேண்டும். அதைச சுத்தஞ்செய்ய ஓர் சாணைக்கல் உண்டு. அது தான் கல்வியென்று சொல்லப்படுவது. கல்வியென்னும் சாணைக்கல்லில் சதா தீட்டிக்கொண்டு வருவதினால் வெறுங் கூழாங்கல்லுக்குச் சமானமாக விருந்த அறிவு சோபையுற்று மாணிக்கக் கற்போல பிரகாசிக்கும். இந்தப் பிரகாசம் அறிவுக்கு ஏற்பட்டதும் அந்த அறிவை யுடையோனுக்கு எல்லாநலங்களும் வந்து அமையாநிற்கின்றன. கல்வியென்றால் எடுத்த புத்தகங்களையெல்லாம் வாசிக்கும் தன்மையிலோ அல்லது தன் பெயரை யெழுதமாத்திரமோ கற்றுக்கொள்ளுவதன்று. அவ்விதமாகிய தன்மைக்கு கல்விகற்றல் என்னும்படியான சிறந்தபட்டமே கிடையாது. கேவலம் கிளியென்னும் பட்

சியுமன்றே நாம் சொல்லிக்கொடுப்பதின்பிரகாரம் பேசக்கற்றுக்கொள்ளுகிறது. நாம் சொல்லும் பிரகாரம் சொல்லத்தான் அப்பட்சிக்குத்தெரியுமேயொழிய தான் சொல்லுவதினுடைய தாற்பரியம்தெரிந்தன்று. அதுபோலவே ஒருவன் ஏட்டளவில் கற்றகல்வி அவனுக்கு எவ்விதமாகிய நன்மையையும் பயக்காது. அவனுடைய அறிவை எவ்வாற்றானும் விசாலப்படுத்தாது. ஒருவன் ஏழுவண்டிகள் நிரம்பிய அளவிலாய புத்தகங்களைப் படித்தபோதிலும் அவற்றின்சாரம் உணராது படிப்பானேயானல் அது கல்விகற்றதாகமாட்டாது. ஆனல் ஒருவன் ஒரே ஒருநூலை, அது அவனுடைய அறிவை விசாலப்படுத்தும் விதத்தில், படித்தவனாக இருப்பானேயானல் அவனே கல்விமானாகும். முந்தியவகையில் கற்றகல்வி ஏட்டளவில் கற்றதாகும். பிந்தியவகையினது அறிவைப்பிரகாசிக்குந் தன்மையில் கற்றதாகும். இப்பிந்தியவகையிலான கல்வியை ஒருவன் கற்பானேயானல் அவனுடைய அறிவு மிக்க விசாலமாயிருக்க அவனுக்குச் சந்தேகம் என்னும் பதமே தெரியாததாகும். பிறர் சொல்லும் உரையிலும் தன் சொந்த அபிப்பிராயத்திலும் மெய்ப்பொருள் இன்னதென்பதைத் தெட்டன அறிந்துகொள்ளும்வகை அவனிடத்தில் இருந்து விளங்குமாகையால் அங்கே அந்த அறிவுடன் கூடிக்குடியிருக்க இடமில்லாமல் சந்தேகம்வந்து தங்காது. "எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்றும் "எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு"—என்றும் நாயனர் கூறியிருப்பன கூர்ந்து கவனிக்குந் தன்மையினவாகும். யாவர் எவ்வண்ணஞ் சொன்ன

போதிலும், விசாலமாகிய அறிவு ஒருவனிடத்தில் இருந்து விளங்குமேயானால் தான்கேட்ட உரையினுண்மை இவ்வண்ணமென்ற முடிவுரையை அவன் உடனே காண்டற்கமையும். ஆகையினால் ஒவ்வொருவரும் கல்வி கற்கவேண்டிய முறைமையில் கற்று அறிவை விசாலப்படுத்திக்கொண்டு, அவ்விதமாகிய அறிவுகொண்டுவழங்கும் ஆராய்ச்சித்தன்மையைப்பெற்று, ஆராய்ச்சியின்மையால் ஏற்படும் சந்தேகத்தை ஒழித்துக்கொள்ளவேண்டும். சந்தேகம் பொதுவில் கெடுதி செய்யக்கூடியதாயிருக்கிறதென்றால் ஆராய்ச்சியின்மையால் எற்படும் சந்தேகம் ஒருவனுடைய முன்னேற்றத்தைப் பல வகையாலும் தடைப்படுத்தி மீட்சியில்லாவகையிலான துன்பத்துட் புகுத்திவிடும்.

இனி மூடவிஸ்வாஸத்தினால் உண்டாகும் சந்தேகத்தைப்பற்றி ஆராய்வாம். விஸ்வாஸம் என்றால் நம்பிக்கை. மூடவிஸ்வாஸமென்றால் நம்பிக்கையின்மை. நம்பிக்கை நன்மைபயக்கும். நம்பிக்கையின்மை தீமையையே உண்டு பண்ணும். நம்பிக்கை இன்மையாகிய மூடவிஸ்வாஸத்தை ஒருவன் கைக்கொண்டால் அதனால் சந்தேகம் உண்டாகும். சந்தேகத்தினுடைய பயனை முன்பே அறிந்துள்ளோம். அச்சந்தேகம் மூடவிஸ்வாஸத்தினால் நிகழ்வதென்றால் அது எவ்வாற்றானும் விரும்பக்கூடியதன்றாம். இந்த மூடவிஸ்வாஸம் ஆராய்ச்சித் தன்மையின்மையினாலேயே உண்டாகிறதென்று சொல்லலாம். ஒருவன் ஏதாவது ஒருவிஷயத்தைத் தன்மனம் போனவிதத்தில் கொண்டுவிட்டால் அது சரியானதாக வில்லாமலிருக்கக்கண்ட பிறர் அதைப்பற்றி யெடுத்துச்சொல்லி சரியானவழி இன்னதெனக் காட்டினால் தான்கொண்டுற்ற

மூடநம்பிக்கையின் காரணமாக அவ்வுரையில் நம்பிக்கை கொள்ளுகிறதில்லை. "தனக்கு வெகுபுத்தி யுண்டாகினும் வேறொருவர்தம் புத்தி கேட்கவேண்டும்" என்றார்கள் மேலோர். தன்னுடைய சுயபுத்தியைப்பார்க்கிலும் வேறொருவருடைய சொற்புத்தி சிறந்த தன்மையினதாக இருக்குமேல் அதைத் தனக்குக்கிடைத்த தனமெனப்பாவித்து அதை உடனே கைக்கொண்டு அதன் பிரகாரம் நடக்கவேண்டும். அவ்வண்ணங் கேட்காமற்போனால் அதனால் ஏற்படுவது லோபமேயன்றி லாபமன்று. எடுத்ததற்கெல்லாம் பிறர் புத்தியைக் கைக்கொள்ளுவதென்றாலும் சரியன்றாகையினால், பிறர் சொல்லுவதினுடைய இதமகிதத்தை அறிந்துகொள்ளுவதற்கு தன்னுடைய இடத்தில் ஆராய்ச்சித்தன்மையிருக்க வேண்டும். நமக்கு இவ்வண்ணந் தோன்றுகிறது, இன்னார் இவ்வண்ணங் கூறினார், இனி இவ்விரண்டில் எது யுக்தமானது, எதைச்செய்தால் அதனால் யாதொரு அபஜயமும் ஏற்படாமல் ஜயம் சித்தியாகும், என்பதாகிய முடிந்த அபிப்பிராயத்திற்கு வரவேண்டும். ஆராய்ச்சித்தன்மை யில்லாமற்போனால் இவ்வண்ணமாகிய அபிப்பிராயத்திற்கு வரமுடியாது. இந்த மூடநம்பிக்கையுள்ளோர்களில் பலர் தங்களுடைய மனம்போன வண்ணம் பெரியோர்களுடைய உரையிலும் தலையிட்டு அனர்த்தம் செய்யத்தொடங்குகிறார்கள். இது எதுபோன்றதென்னில்? தான் கெடுவதல்லாமல் பிறரையும் கெடுக்கப்போதலை யொக்கும். மூடவிஸ்வாஸமுள்ளவன் தன்னுடைய தொழில் முயற்சியிலும், குடும்பப்பாதுகாப்பு விஷயத்திலும், மதசாம்பிரதாயமான விஷயங்களிலும் முன்னேற்றமடையாமற்போக நேரிடும். மூடவிஸ்வாஸத்தைக்

கைக்கொண்டால் சபலசித்தத்தையும், ஆராய்ச்சியின்மையை யும், பிறகேடுகளையுங் கொண்டுவந்து சேர்ப்பிக்கும். இந்த முடவிஸ்வாஸம் யாரைப்பற்றுகிறதென்றால்? கல்வியில்லா ரையும், ஆணித்தரமான கல்வி கற்காதவர்களையுமே என்ன லாம். ஆணித்தரமான கல்வி கற்றோர்களாகத் தங்களை எண் ணிக்கொள்ளுகிறவர்களில் பலரும் இந்த மூடவிஸ்வாஸத் தைக் கைக்கொண்டுள்ளார்கள். இதற்குக் காரணம் தங்களு டைய தப்பபிப்பிராயமே அறிவை விசாலப்படுத்திக்கொள் ளாதவகையில் கற்குங்கல்வி, கல்வியென்னும்படியான சிறப் புப்பெயரையே பெறமாட்டாது. மூடவிஸ்வாஸம் எந்த மனதுட் குடிபுகுந்துளதோ அங்கே அதனுடனேயே சந்தேக மும் குடிபுகுந்து நிற்கும். மூடவிஸ்வாஸத்தை யொழித்து ஓட்டினால் அப்பொழுதுதான் அச்சந்தேகமும் ஒழிந்து போகும். பிறர் சொல்லுகிறார்களே யென்றோ அல்லது இவ் வண்ணம் ஏன் இருக்கப்படாதென்றோ ஒரு விஷயத்தில் நம் பிக்கைகொண்டால் அது ஒருக்காலும் முடிந்தகொள்கை யாகாது. ஏனென்றால்? அதன்பிறகு தன்மனத்துள் தானே வேறுவிதமான எண்ணம் தோன்றவும் வழியுண்டாகும், வேறு யார் ஏதும் அதற்கு மாறாகச்சொன்னாலும் அதை மாற்ற வேண்டியதாக நேரிடும். இதனால் சந்தேகங்கள் பல, ஒன்றன்பின்னொன்றாக நிகழ்ந்து முடிவில் யாதொரு முடிவுக் கும் வாராமல் ஒருவன் செய்யத்தொடங்கிய காரியம் தடைப் பட்டுப்போகும். ஆகையினாலேயே மூடவிஸ்வாஸத்தை உடனே யொழித்து அதனாலேற்படும் சந்தேகத்தையும் உடன் ஒழித்துவிடவேண்டும்.

178540

இனி, அனுமானத்தால் நிகழும் சந்தேகத்தைப்பற்றி ஆராய்வாம். இச்சந்தேகம் பலவித சண்டாளத்துவங்களுக்கு அன்னையாக இருக்கிறது. ஏதாவதொரு விஷயத்தைப்பற்றி அனுமானத்தின்மேல் சந்தேகம் கொண்டுவிடுவோமேயானல், அதன் பிறகு நிகழும் அனுமானங்களெல்லாம் முதற்கண் கொண்ட சந்தேகத்தை வலியுறுத்தா நிற்கும். இச்சந்தேகத்தினல் நிரபராதியர்கள் பலர் அநேக கஷ்டங்களுக்கு ஆட்பட்டுள்ளார்கள். அனுமானம் என்ற மாத்திரத்தில் அது பக்க நிகழ்ச்சிகளால் ஏற்படும் விஷயம் என்பதாயிற்று. சாதாரணமாக ஒருவன் 'தன்னுடைய கண்ணினல் பார்ப்பதும் பொய் காதினல் கேட்பதும் பொய் தீரவிசாரிப்பது மெய்' என்று சொல்லும் உரைபோல ஒருவன் தன்னுடைய கண்ணினல் பார்ப்பதும் காதினல் கேட்பதுமே பொய்மையான விஷயமாகுமேல், பிறருடைய உரையிலிருந்தும் வேறு பலபக்க நிகழ்ச்சிகளாலும் ஏற்படும் விஷயங்களினிடத்தில் உறுதிப்பாடு கொண்டு சந்தேகக் கண்கொண்டு பார்ப்பது சரியாகுமா? ஆராய்ச்சித் தன்மையில்லாமையினலேயே இச்சந்தேகம் உண்டாகிறதென்று சொன்னபோதிலும், அத்தகையோரில் பலர் தாங்கள் செய்யும் ஆராய்ச்சியிலும் பலவித உடன் நிகழ்ச்சிகள் தோன்றி எல்லாம் அனுமானமாகவே ஏற்பட்டு முதற்கண் கொண்ட சந்தேகத்தையே பலப்படுத்தா நிற்கும். இவ்வண்ணம் ஆவதற்குக் காரணம் திடசித்தமில்லாமையேயாகும். திடசித்தமில்லாமையினல் நிதானமான—பொறுமையான—தன்மையில்லாது போய் தன்னுடைய ஆராய்ச்சியில் முடிந்த அபிப்பிராயம் பெறமுடியாது போய் தன்போக்கில் பலவிதமான இன்னல்களைப் பிறருக்குத் தேடி யமைப்பதுமல்லாமல்

தனக்கே நிம்மதியற்ற மனத்தையும், சுகமிழந்தவாழ்க்கையை யும் தேடியமைத்துக்கொள்ளும்படியாகச் சம்பவிக்கும். இதில் யாதும் ஆட்சேபமின்று. இந்த அனுமானத்தினுல் நிகழும் சந்தேகத்தை ஓர் அனுபவ உதாரண வழியாக விளக்குவாம்.

முருகன் என்னும் பெயர் கொண்டவன் ஒருவன். கண்ணன் என்னும் பெயரியவேறொருவன். இவர்களிருவருக்கும் பரஸ்பரமாகிய — அன்னியோன்யமான — சிநேக வாஞ்சை யுண்டு. முருகன் என்பவனுக்கு அவன் பால்யத்திலேயே விவாகமாயிருந்தது. கண்ணன் என்பவன் பிரமசாரி விரத முடையவனுக விருந்தான். அவனுக்கு இன்னும் விவாகமாக வில்லை. கண்ணனுக்கு முருகனிடத்தில் எவ்வளவு அன்னி யோன்ய நேசபான்மையுண்டோ அவ்வளவு நேசம் முருக னுடைய இல்லக்கிழத்தியாகிய அபிராமியினிடத்திலும் உண்டு. ஆனுல் அபிராமியும் கண்ணனும் கேவலம் சகோதர சகோதரிபாவனை கொண்டுலாவி வந்தார்களேயொழிய வேறு எவ்விதமாகிய விபரீத உணர்ச்சியும் அவர்களுக்குள் கடவுட் சாட்சியாக உண்டாயிருக்கவில்லை. முருகன் முன்னிலையி லும் அபிராமியோடு கண்ணன் யாதொருவித்தியாஸமுமில்லா மல் சம்பாஷிக்கிறதுண்டு. இதை வேறு பலரும் அறிவார்க ளேனும் சிலர் அவர்களிருவருக்கும் ஏற்பட்டிருந்த அன்னி யோன்னியத் தன்மைக்கு சில விபரீத மகுடங்கள் சூட்டின துண்டு. இவ்விஷயம் இப்படியிருக்க. சங்கரன் என்பவ னொருவன். முருகனுக்கும் கண்ணனுக்கும் ஏற்பட்டிருக்கும் சிநேகபந்தத்தைக்கண்டு சங்கானுல் பொறுக்கமுடியவில்லை. அவனுடையமனம் விண்டுபோய்விடும்போ லிருந்தது. அதி லும் கண்ணன் அபிராமியோடு மனமொத்த தன்மையில்

வார்த்தையாடுவதைப் பார்க்கும் பொழுதெல்லாம் தன்னுடைய மூதாதையர்கள் சம்பாதித்து வைத்துப்போன பொருள் அபகரிக்கப்பட்டுப் போனதுபோல் அவனுக்கு இருந்துவந்தது. சிநேகிதர்கள் இருவருக்குள்ளும் எப்படியாவது ஒரு மனக்கலக்கத்தை மூட்டிவிட வேண்டுமென்று கங்கணங் கட்டிக்கொண்டான். நெடுநாளாக இந்தக்காரியத்தை 'இதுவெகு சிறந்த காரியமன்றோ!) முடித்துவைக்க எதிர்பார்த்திருந்தவன், ஒருநாள் முருகனைத் தனிமையில் அழைத்துப்போய் அவன் மனைவி அபிராமிக்கும் கண்ணனுக்கும் தொந்தம் உண்டென்றும், அதன்காரணமாகவே கண்ணன் அபிராமியோடு அன்னியோன்னியமாயிருந்து வருகிறானென்றும், அவர்களிருவருக்குள்ளும் இருந்துவந்த தன்மை சிநேகிதமன்று ஆனால் சல்லாபமேயென்றும், கதை படித்து வைத்தான். சங்கரன் கூறியவிதத்தில் முருகனுக்கு அப்படியிருக்கக்கூடும் என்கிற சந்தேகம் உண்டாகிவிட்டது. இச்சந்தேகத்தோடு முருகன் தன்மனைவி அபிராமிக்கும் கண்ணனுக்கும் நடக்கும் சம்பாஷணைகளையும் மற்ற ஒழுக்கங்களையும் சந்தேகக்கண்கொண்டு கவனித்து வரலானான். இப்படியிருக்கும்பொழுது ஒருநாள் கண்ணன் முருகன் வீட்டுத்திண்ணைப்புறமாயிருந்த பலகணியண்டையிலிருந்து அபிராமியை விளித்து முருகன் வீட்டிலிருக்கிறானா? என்று வினவினான். இவ்விதமாக கண்ணன் வினவுவது சகஜமே. ஆனால் இப்பொழுது சந்தேகங்கொண்டிருந்த முருகனுக்கு கண்ணனுடைய வினா ஒருவித விபரீத உணர்ச்சியை யுண்டுபண்ணிற்று. அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமலே மேலும் நடப்பதைக் கவனித்து வரலானான். இப்படியிருக்க ஒருநாள்

முருகன் வீட்டிலில்லாத சமயத்தில் கண்ணன் ஏதோ சில தின்பண்டங்கள் வாங்கிவந்து அபிராமியிடத்தில் கொடுத்துப்போனான். அபிராமி அத்தின்பண்டங்களைத் தன்னுடைய புருஷனுக்குப் பரிமாரியபொழுது அவன் அவைகள் ஏது என்று கேட்டான்? அபிராமி அதற்குத்தாரமாக "அண்ணன் கொண்டுவந்து கொடுத்துப் போனார்" என்று சொன்னாள். அந்தவிடை முருகனுடைய மனத்தைப் பெரிதும் தொந்தரை செய்யலாயிற்று. கண்ணன் தின்பண்டம் வாங்கிக்கொடுத்துப் போனது புதுமையான விஷயமன்று. இதற்குமுன் எத்தனையோமுறை கண்ணன் முருகன் இல்லாத சமயத்திலும் அவன் வீட்டிலிருந்தபொழுதும் தின்பண்டங்களும் பழவருக்கங்களும் வாங்கிக்கொண்டுவந்து கொடுப்பதுண்டு. ஆனால் முருகன் தன்மனத்தில் அனுமானத்தினால் ஏற்பட்ட சந்தேகத்தைக் குடிவைத்துக்கொண்டிருந்தானாகையினால் நிகழும் காரியங்களெல்லாம் அவனுக்குச் சந்தேகமாகவே தோன்றின. மற்றோர் சமயம், கண்ணன் முருகனை வழியில்காண நேரிட அவனிடத்தில் ஒரு கடிதத்தைக் கொடுத்து "இதைத் தங்கையினிடத்தில் கொடுத்துவிடுங்கள்" என்று சொல்லித் தன்னலுவலின்மேல் போய்விட்டான். அவன் போனமேல் முருகன் அக்கடிதத்தைப் பிரித்து வாசித்துப் பார்த்தான். அதில் கீழ்க்கண்டவாறு வரையப்பட்டிருந்தது:—

என் அன்பார்ந்த தங்கைக்கு—

நான் நெடுநாட்களாக வருகிறதில்லை யென்று என்மீது வருத்தங்கொள்ளவேண்டாம். நான் இரண்டொரு சமயம் வந்திருந்தபொழுது அவர் இருந்த இல்லாமையினால் அவரை

யும் நெடுநாட்களாகக் காணவில்லை. இரண்டொரு தினங்க ளில் நேரில்வந்து காண்பேன்.

இப்படிக்கு,

கண்ணன்.

இதைப் படித்ததும் முருகனுக்கு விபரீத உணர்ச்சி உண்டாகிவிட்டது. மேற்காட்டிய கடிதத்தில் "இருந்த" என்னும் பதம் அடிக்கப்பட்டு "இல்லாமையினால்" என்று எழுதப்பட்டிருந்தது அவனுக்குப் பலவிதமான அனுமானங் களைக் கொண்டுதவியது. "ஓ. ஓ. இரண்டொரு சமயம் அவன் என் வீட்டுக்கு வந்திருந்தபொழுது நான் இருந்தது அவனுடைய சுசட்டொழுக்கத்திற்கு இடையூறாக இருந்தது போலும். அடா! நயவஞ்சகா! உன்னுடைய நேசம் இனிமேல் எனக்குவேண்டாம் என்று தன்னுட்டானே சொல்லி முணு முணுத்துக் கொண்டு தன்மனைவியையும் மனதில் வெறுத் துக்கொண்டவனாகஅந்தக் கடிதத்தை அபிராமியினிடங்கொடு க்காமல் தன்னிடமே பத்திரமாக வைத்துக் கொண்டான். அன் றையதினம் முருகன் தன்மனைவியிடம் சரியானபடி சம்பா ஷிக்கவில்லை. அவன் மனதில் குடிகொண்டிருந்த சந்தேகத்தை அவன் மனைவி அறியாளாகையினால் தன்கணவனை நோக்கி "நாதா! எங்கே அண்ணாத்தையை நெடுநாளாகக் காணோம்", என்று உசாவினாள். எழுந்தான் முருகன் நாகசர்ப்பம்போல "அடி தடித்தேவடியாளே! உனக்கு அண்ணாத்தை ஒரு கேடா? அந்தச் சண்டாளன் இனிமேல் இங்கேவரமாட்டான், வந்தாலும் நான் வரவேண்டாமென்று சொன்னதாகச் சொல்" என்று கட்டளை யிட்டனன். இதன் கருத்தையறியாத அபி

ராமி மேலுங் கேட்டறியாமல் வாளா விருந்து விட்டாள். மறுநாள் கண்ணன் முருகன் வீட்டுக்குப் போன பொழுது முருகன் கடுகடுத்துப் பேசியது மல்லாமல் அவனுடைய சிநேகிதத்தை அத்துடன் நிறுத்திக் கொள்ளும் படியாகவுஞ் சொன்னான். கண்ணன் எதிர்த்து வார்த்தையாடாமல் உடனே போய்விட்டான்.

இது நடந்த சிலகாலத்துக்குப் பிறகு ஓர் தினம் முருகனுக்கும் அவன் மனைவி அபிராமிக்கும் கண்ணனைப் பற்றிய சம்பாஷணையுண்டாக முருகன் தன்மனைவியை நோக்கி "அடி கள்ளி! என்னை மோசஞ் செய்து நீ பிறந்த குலத்துக்கும் புகுந்த குலத்துக்கும் அவமானம் தேடிவைத்தவளல்லவா?" என்று கடிந்துரைத்தான். ஒரு பாவமும் அறியாதவளாகிய அபிராமி தன்கணவனை நோக்கி அவர் அவ்வித அபிப்பிராயங் கொண்டதின் காரணத்தை விளக்கும்படியாக முருகனுடைய பாதங்களில் விழுந்து வேண்டிக் கொண்டாள். முருகனும் அவளுடைய வேண்டு கோட்கிரங்கி தன் வசத்திலிருந்த கடிதத்தைக் காட்டினான். அதைப்பார்த்த அவளுக்கு யாதொரு விதமான நூதனமும் அதனிடமாக விளங்க வில்லை. எப்படி விளங்கும். அவளுடைய மனம் பரிசுத்தமாயிருந்த படியாலும் அவளிடத்தில் சந்தேகம் குடி கொள்ளாமலிருந்த படியாலும் அக்கடிதத்தில் தன்னுடைய கற்பை சோதனைக்குள்ளாக்கக் கூடிய விஷயமேதும் இருப்பதாக அவளுடைய எண்ணத்தில் தட்டுப்படவில்லை. அதன் பிறகு முருகன் அக்கடிதத்திலுள்ள சந்தேகத்தைத் தரும்படியான சொல் மாற்றை யெடுத்துக் காட்டினான். அதைக் கேட்ட அபிராமியினுடைய மனமிருந்தவாறு ஈசனுக்கே வெளிப்படட தனக்

கும் தன்னுடைய சொந்தசகோதரனே போல் கருதப்பட்டு வந்தவருமாகிய கண்ணனுக்கும் எவ்வித விபரீத மனநிகழ்ச்சியுங் கிடையாதென்று பலவிதமான சூளுரைகளினால் பகர்ந்தனள். இவ்வாறெல்லாம் அபிராமி தன்னுடைய கற்பை நிலைநிறுத்தப் பார்த்தும் சந்தேகத்தைத் தான் மனதுட்குடிவாழவைத்திருந்த முருகனுக்கு நம்பிக்கை யென்பது தோன்றுமாறாக இருக்க வில்லை. இப்படியாகச் சின்னாள் கழிந்தன. அதன் பிறகு ஓர் நாள் கண்ணனைக் கண்டு நேரில் தன்னுடைய சந்தேகத்தை வெளியிடுவதென்று முருகன் யோசனை செய்து அவ்வாறே கண்ணனையழைத்து அவனிடத்தில் தான் கொண்டுள்ள சந்தேகத்தைப்பற்றி வெளியிட்டான். முருகன் வெளியிட்டுக் கொண்டுவரும் பொழுதே கண்ணனுடைய மனம் உலையத்தலைப்பட்டது "சிவ சிவா" வென்று கூறி தன்னிரு காதுகளையும் பொத்திக் கொண்டவண்ணமாக இருந்து யாவையுங் கேட்டு அவ்வாறாகிய துர்நடத்தையை தன் மனத்திற்றானும் கொண்டது கிடையாது என்று சூளுரை பகர்ந்தான். அதைக் கேட்ட முருகன் அப்படியானால் இதோ இந்தக் கடிதத்திலுள்ள வார்த்தை மாறுபாடு என்? என்று வினவினான் அது தன்னுடைய கைபிசகென்று சொல்லி வேறுபல சமாதானங்களும் எடுத்துச்சொன்னான். அதன் பிறகு முருகன் புத்திசாலியாகையினால் அவன் கொண்டிருந்த சந்தேகம் அவன் மனதிலிருந்து சிறுகச்சிறுக மறையத்தலைப்பட்டு அடியோடு போயொழிந்தது. அதன் பிறகு முருகனுக்கும் கண்ணனுக்கும் மீட்டும் சிநேகவாஞ்சை தோன்றி முன்போல நெருங்கிப் பழகிவரத் தலைப்பட்டனர்கள்.

இச்சம்பவத்துள் கூறியுள்ளனவற்றைக் கவனிக்கின் அநுமானங்களினால் ஏற்படும் சந்தேகம் விளைவிக்கும்படியான விபரீதம் இத்தன்மையினதென்று தெற்றெனவிளங்காமற் போகாது.

ஆகையினால் இக்கொடிய சந்தேகம் என்றுமே அதைக்கொண்டுற்றவனுடைய முன்னேற்றத்தைத் தடைப்படுத்தி இகத்தில் நிம்மதியற்ற மனநிலைமையையும் சந்தோடமற்ற வாழ்வையும் அளிப்பதாயிருக்கிறபடியால் அதைக்கைக்கொள்ளாமலும், பயன் தெரியாது முன்பே அதன் வசப்பட்டிருப்போர்கள் அதை உடனே விட்டொழித்தும் விடவேண்டுமென்பதுவே எமது கோரிக்கை.

ச. தா. மூர்த்தி.

Printed at the "Cd;it" Press, Madras. N. C—1918.

# தமிழபிமானியர்களே!

---

நவீனகதா புத்தகசாலை,
111, மங்கமாரி வீதி, இரங்கோன்.
8, சூளை பஜார் சாலை, சென்னை.

---

எல்லாவிதமான தமிழ்ப் புத்தகங்களும் கிடைக்கும்.

ச. தா. மூர்த்தி முதலியாரால் இயற்றப்பட்ட

இதர புத்தகங்கள்.

| | | | ரூ. | அ. |
|---|---|---|---|---|
| 1. | கண்ணம்மாள் அல்லது கண்டதும் காதல். | ... | 0 | 8 |
| 2. | நாகரத்தினம் அல்லது விஷச்குண்டூசி. | ... | 0 | 8 |
| 3. | சிவகாமி அல்லது தப்பியோடிய பெண். | ... | 0 | 8 |
| 4. | தியாகராஜன் அல்லது நல்லொழுக்கசீலன். | ... | 0 | 8 |
| 5. | அம்புஜவிலாசத்தின் அதிசயச்சம்பவம். | ... | 0 | 8 |
| 6. | மாணிக்கவல்லி ... ... | ... | 0 | 8 |
| 7. | நடராஜன் நாடகம் சென்ற சம்பவம். | ... | 0 | 8 |
| 8. | நீல அறையின் அதிசயம். ... | ... | 0 | 6 |
| 9. | என் தந்தையார் (பக்திரச நூல்). | ... | 0 | 6 |
| 10. | கூடாவொழுக்கச் சகோதரன்... | ... | 0 | 6 |
| 11. | அம்பிகாபதி அல்லது கம்பர் குமாரன். | ... | 0 | 4 |
| 12. | தபால் சரித்திர சாரசங்கிரகம்... | ... | 0 | 4 |
| 13. | அஸ்தபூஷணம் அல்லது அறன்கடை விலக்கு. | | 0 | 4 |
| 14. | பதினாறுபேறு. ... ... | ... | 0 | 4 |
| 15. | கற்பு. ... ... | ... | 0 | 3 |
| 16. | இல்லறம். ... ... | ... | 0 | 2 |
| 17. | பொது மதம். ... ... | ... | 0 | 2 |
| 18. | சந்தேசம். ... ... | ... | 0 | 2 |
| 19. | தவம். ... ... | ... | 0 | 1 |
| 20. | பலவகை மனிதர். ... | ... | 0 | 1 |
| 21. | அவதாரமஹிமை. ... | ... | 0 | 1 |
| 22. | அன்பு. ... ... | ... | 0 | 1 |
| 2?. | இருவினை. ... ... | ... | 0 | 1 |

நவீனகதா புத்தகசாலை,

| (ஹெட் ஆபீஸ்) | (பிராஞ்ச் ஆபீஸ்) |
|---|---|
| 111, மங்கமாரி வீதி, | 8, ரூலி பஜார்சாலை, |
| இரங்கூன். | சென்னை. |